# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



கணியாம்பூண்டி ஊராட்சி திருப்பூர் மாவட்டம்

கணியாம்பூண்டி ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. ர. தங்கமணி

ந.க.எண் : 03/2021-2022

நாள் : 18.03.2022

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம்-அவிநாசி வட்டாரம் - கணியாம்பூண்டி ஊராட்சி- கணியாம்பூண்டி கிராமம் க.ச.எண் : 66/2C2A –ல் 2.32 ½ ஏக்கர் அல்லது 9409.00ச.மீ பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது- மனைப்பிரிவிற்கு வரைபட அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல்-தொடர்பாக.

பார்வை : 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண் : 2595/2021/ தி.மா./திஉதிகு நாள் : 21.12.2021

2.கணியாம்பூண்டி ஊராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்ட வங்கி வரைவு நாள் : 18.03.2022

3.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண் : 4367/2019/TCP2 நாள் : 14.08.2021

உத்திரவு:

திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஊராட்சி ஒன்றியம் கணியாம்பூண்டி ஊராட்சிக்குட்பட்ட கணியாம்பூண்டி கிராமம் 66/2C2A –ல் 2.32 ½ ஏக்கர் அல்லது 9409.00ச.மீ பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகளின்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவுக்கு மவ/நஊ(தி.மா) எண் : 69/2021 என எண்ணிடப்பட்டுள்ளது

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | 9811.00 ச.மீ |
| பூங்கா மற்றும் சாலையின் பரப்பளவு | 3033.90 ச.மீ |
| நிகர மனைய்ின் பரப்பளவு | 6777.10 ச.மீ |

167.25 செண்ட் * 1000 = 1,67,250 + ஆய்வு கட்டணம் ரூ. 2000/- சேர்த்து மொத்தம் ரூ. 1,69,250 /- ( ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபத்தி ஒன்பதாயிரத்தி இரநூற்றி ஐம்பது மட்டும்) பார்வை 2-ல் காணும் உத்திரவுபடி கணியாம்பூண்டி ஊராட்சி பொது நிதி கணக்கு எண்ணில் செலுத்தியுள்ளார். எனவே கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மன்றத்தின் தீர்மானத்தை எதிர்நோக்கி வரைபட அங்கீகாரம் மற்றும் மனைப்பிரிவு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

87 (87)



நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகளின்படி வழங்கப்பட்ட மவ/ந.ஊ(தி.மா) எண் : 69/2021 குறிப்பிட்டுள்ளவாறு எல்லைக்கற்களால் வரையறுக்கப்படல் வேண்டும்

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு மவ/ந.ஊ (தி.மா) எண் : 69/2021-ல் கோப்பு எண் ந.க.எண் : 2595/2021 /திமா. நாள் : 21.12.2021 நிபந்தனைகளின் படியும் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக 20 ரூபாய் ஒப்பந்தப்பத்திரத்தில் (ஸ்டாம்பு பேப்பரில்) எழுதிக் கொடுக்க வேண்டும்.

இணைப்பு :

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகளின் அசல் கடிதம் மற்றும் நிபந்தனைகள் ந.க.எண் : 2595/2021 /திமா. நாள் : 21.12.2021

பெறுநர் :

திரு. தியாகராஜன் மற்றும்

திரு. பிரேம் பிரகாஷ் சிக்கா

க.எண் : 7/5 காந்தி நகர்

4-வது வீதி திருப்பூர்

நகல் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் மாவட்டம்

R. T. mani

செயல் அலுவலர்/தலைவர்
கணியாம்பூண்டி ஊராட்சி

[illegible]

பொருள்: [illegible]

பார்வை :

1. மனுதாரர் திரு.[illegible], திருப்பூர் அவர்களது விண்ணப்பங்கள் நாள்.05.07.2021, 24.08.2021, 31.08.2021 மற்றும் 11.12.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.24.08.2021 (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை. ந.க.எண். 4367/2015-1C/2 நாள். 14.08.2021
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 19793/2020/சொ நாள்.24.12.2020
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004
6. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020
8. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்(UD4(3)) துறை, நாள்.23.09.2020
9. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1 நாள் 08.09.2017
12. மேற்பார்வை பொறியாளர் கோவை மின் பகிர்மான வட்டம்/தெற்கு, கோயம்புத்தூர் அவர்களது கடிதம் க.எண்.மேபாபொ/கோமிபவ/தெ/உ.செ.பொ/மேமா/கோ.நிலம் கையகப்படுத்துதல்/ஆ.எண்./21 நாள். 03.12.2021.
13. இவ்வலுவலகக் கடிதம் இதே எண். நாள் கட்டண கேட்பு வரைவு நாள்.19.08.2021 மற்றும் 01.09.2021( மனுதாரருக்கு முகவரியிட்டது).
14. மனுதாரர் OSR கட்டணம் மற்றும் நன்னிலை கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்.24.08.2021 மற்றும் 06.09.2021

******

உத்தரவு:

பார்வை 1 -ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு பார்வை 2 - ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை மற்றும் பொது உபயோக அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. மனைப்பிரிவு சாலை மற்றும் உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண். 10225/2021 நாள்.27.08.2021 -ல் தானமாக ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் ஆவணம் மற்றும் அதன் நோட்டரி சான்றொப்பமிட்ட நகல் மற்றும் TANGEDCO ற்கான பொது ஒதுக்கீட்டினை TANGEDCO யிடம் தானமாக தானப்பத்திர எண். 10223/2021 நாள்.27.08.2021 மற்றும் பிழை

திருத்த பத்திரம் எண். 14196/2021 நாள்.08.11.2021-ல் ஒப்படைக்கப்பட்டு அதன் நோட்டரி சான்றொப்பமிட்ட நகலும் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்- திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி - திருப்பூர் மாவட்டம்-அவிநாசி வட்டம்-கணியாம்பூண்டி கிராமம், க.ச.எண்.66/2C2A -ல் 2.32 ½ ஏக்கர் (அ) 9409.00ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ./ந.ஊ.(திமா)/தி.உ.தி.கு. எண் 69/2021 -ல் தொழில் நுட்ப அனுமதியும், மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண். 73/2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ) -ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு, அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை-7-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11) ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, strom water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b). மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT provide necessary street lights etc.. as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கிவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புர பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020 ___ ன் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11 - ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

4. "The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and urban Development Department date: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016 . The promoter has to advertise, market, book, sell or offer for sale ,or invite persions to Purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real estate projet or part of it only after registering the real estate projet with the real estate regulatory Authority - ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(மு.கூ.பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்

இணைப்பு :
முத்திரையிடப்பட்ட வரைபடம் - 2
நிபந்தனைப்படிவம் -2
தானப்பத்திர எண். 10225/2021 நாள்.27.08.2021-ன் அசல்

பெறுநர் :
தலைவர்
கணியாம்பூண்டி ஊராட்சி மற்றும் கிராமம்
அவிநாசி ஊராட்சி ஒன்றியம்
அவிநாசி வட்டம்
திருப்பூர் மாவட்டம்

நகல் :

1. மனுதாரர் (பத்தி ஒன்று மட்டும்)
   திரு.E.தியாகராஜன் மற்றும்
   திரு.பிரேம் பிரகாஷ் சிக்கா,
   க.எண்.7/5 காந்தி நகர்
   4 வது வீதி
   திருப்பூர் மாவட்டம்-641603

2. The Chairman
   Tamilnadu Real Estate Regulatory Authority
   No.1A, CMDA Tower, Ist Floor
   Gandhi Irwin Bridge Road
   Egmore, Chennai-600008

3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத்துறை
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.

தலைவர்
கணியாம்பூண்டி ஊராட்சி (ம) கிராமம்
அவிநாசி ஊராட்சி ஒன்றியம்
அவிநாசி வட்டம்
திருப்பூர் மாவட்டம்

கோப்பு எண்.2595/2021/திமா/திஉ_திரு
மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.(திமா)/தி.உ_தி.கு. எண் 69/2021

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019-இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2. திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத்துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Development Building Rule 2019-ல் குறிப்பிட்டுள்ள Resident Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை, தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

8. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு தொடர்புடைய **தலைவர், கணியாம்பூண்டி ஊராட்சி (ம) கிராமம்** அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில்' கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

10 (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு **திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால்** தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

11 மனுதாரர், **தலைவர், கணியாம்பூண்டி ஊராட்சி (ம) கிராமம் அவர்களிடமிருந்து** மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவுஅங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

12 மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13 நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி நகர் ஊரமைப்புத்துறையால் ரத்து செய்யப்படும்.

14 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

15 தள பரப்பு குறியீடு எண் (FSI) TNCDBR 2019-ன்படி அனுமதிக்கலாம்.

16 கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

17 தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

18 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

19 மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே, மனைப்பிரிவிற்கு **தலைவர், கணியாம்பூண்டி ஊராட்சி (ம) கிராமம் அவர்களால்** ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20 உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.(திமா) எண்.69/2021-ன் ஒதுக்கீடு விபரம்**

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் **திருப்பூர் மாவட்டம், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்-திருப்பூர் மாவட்டம்-அவிநாசி வட்டம்-கணியாம்பூண்டி கிராமம், க.ச.எண்.66/2C2A** -ல் 2.32 ½ ஏக்கர் (அ) **9409.00ச.மீ**

| | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 2.32 ½ ஏக்கர் (அ) 9409.00ச.மீ | |
| கோரிய மனைகள் | | 35 Nos. | |
| ஒதுக்கிய மனைகள் | : | 35 Nos. | |
| **பொது ஒதுக்கீடு :** | | | |
| **மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை** | | | |
| மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் பரப்பு | : | 3033.90 ச.மீ | |
| சாலை நீங்கலாக பரப்பு | : | 6777.10 | |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு | : | 44.00 ச.மீ | 0.65% |
| **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை** | | | |
| மின்பகிர்மான பரப்பு (TANGEDCO) | : | 44.47 ச.மீ | 0.66% |
| 10% பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.58,000/- உரிய அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் 24.08.2021 அன்று **செலுத்தப்பட்டுள்ளது.** | | | |

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்
துணை இயக்குநர்(மு.கூ.பொ)/உறுப்பினர் செயலர் (பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்.
திருப்பூர்



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate